கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.

அசல் வழக்கு எண்.341/2020

பி.வா.சா. –2–ஆனந்தவேல்

நாள். 03.01.2025

பி.வா.சா.2 இன்று ஆஜராகி வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் கூலி வேலை செய்து வருகிறேன். நான் ஏற்கனவே வேறு சிவில் வழக்கில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். என் மீது கிரிமினல் வழக்கு உள்ளது என்றால் சரிதான். எனது அப்பா பழனிச்சாமி 4 ஆம் பிரதிவாதியாக உள்ளார் என்றால் சரிதான். நிருபண வாக்குமூலத்தில் எனக்கு வயது 56 என்றால் சரிதான். 1987 ஆம் ஆண்டு எனக்கு வயது ஞாபகமில்லை. 1983 ஆம் ஆண்டு எனக்கு வயது 13 என்றால் எனக்கு ஞாபகமில்லை. எனது நிருபண வாக்குமூலத்தில் 1982 ஆம் ஆண்டு வழக்கு சொத்துக்கள் சம்பந்மாக பஞ்சாயத்து நடந்தது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தேதி எனக்கு ஞாபகமில்லை. மேற்படி பஞ்சாயத்தில் எழுத்துப்பூர்வமாக எழுதிக்கொண்டார்களா என்றால் இல்லை. என்னை ரகுராம ரெட்டியார் மேற்படி பஞ்சாயத்திற்கு அழைத்துச் சென்றால் என்றால் சரியதான். 2013 ஆ ம் ஆண்டு வழக்கு சொத்துக்களை பொறுத்து ராமசாமி, சேட்டு என்ற பழனிச்சாமி, சுப்பையான ஆகிய மூவரும் 30.09.2013 அன்று பதிவு பத்திரம் மூலம் பாகம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்திற்கு முன்பு வழக்கு சொத்துக்களை பொறுத்து பாகம் ஏற்பட்டது எனக்கு தெரியுமா என்றால் தெரியும் தேதி எனக்கு ஞாபகமில்லை. அம்மாதிரியான பாகம் எதுவும் ஏற்படவில்லை என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா வழக்கு சொத்தை பொறுத்து 22 நபர்கள் கிரையம் பெற்றதாக சொல்லி நான் அந்த ஆவணங்களை செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்துக்களை 22 பேர் அனுபவித்து வருவது பொய் என்றும், மொத்தம் 11 பேர் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் அனுபவித்து வரும் சொத்துக்களை பதிவு செய்யப்படாத கிரைய பத்திரத்தின் மூலம் அனுபவித்து வருகிறேன் என்றால் கிரையம் பெற்றதன் மூலம் அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். மேற்படி பதிவு செய்ப்படாத கிரைய பத்திரத்தை நானே, 4 ஆம் பிரதிவாதியாகிய என் தந்தையே தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கின் 1 முதல் 11 பிரதிவாதிகள் வாதிகளாக இருந்து திண்டுக்கல் டி.மு கோர்ட்டில் அ.வ.எண்.281/2014 என வழக்கின் 14,15 பிரதிவாதிகளை பிரதிவாதிகளாக காட்டி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி வழக்கில் நான் வாதிகள் தரப்பில் 2 வது சாட்சியாக சாட்சியளித்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சாட்சியத்தில் நாங்கள் கிரைய பத்திரத்தின் மூலம் அனுபவித்து வந்துள்ளோமா, அல்லது அனுபவ பாத்தியத்தின் மூலம் அனுபவித்து வருகிறோமா என்று

சொல்லியிருக்கிறேனா என்றால் கிரைய பத்திரத்தின் மூலமாக அனுபவித்து வருகிறேன். மேற்படி சாட்சியத்தின் போது நான் இந்த வழக்கின் சத்திய பிரமாணத்தின் முகவரி தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் 22 பேர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்று சொல்லி 11 பேர்கள் மட்டுமே இவ்வழக்கில் தரப்பினராக இருந்துமீதமுள்ள 11 தரப்பினராக சேர்க்க நானும் 4 ஆம் பிரதிவாதியான என் தகப்பனார் சேர்க்க முயற்சி எடுத்தார்களா என்றால் இல்லை. மேற்படி மீதமுள்ள 11 பேரை திண்டுக்கல் டி.மு கோர்ட்டு வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் இல்லை. 14,15 பிரதிவாதிகள் வழக்கின் 1 முதல் 11 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்துக்களை அனுபவிக்கும் வகைக்கு அனுமதி வழங்கியிருந்தார்கள் என்றும், அதன் பெயரில் சுவாதீனமும் கொடுத்திருந்தார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துகளுக்கான பட்டா முத்துசாமி கவுண்டர் பெயரில் தான் இருந்தது என்றால் சரிதான். தாவா சொத்தில் நான் குடியிருக்கும் வகைக்கும் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் இந்த வழக்கில் தரப்பினராக இல்லை என்றால் சரிதான். 12.12.2005 அன்று ஏற்பட்ட புயல், வெள்ளத்தின் காரணமாக 1 முதல் 11 பிரதிவாதிகள் வீடு இல்லை என்று 14,15 பிரதிவாதிகளிடம் கேட்டதின் பெயரில் அப்போதைக்கு இருந்து கொள்ளும் வகைக்கு 14,15 பிரதிவாதிகள் கொடுத்த ஒப்புதலின் பேரில் 1 முதல் 11 பிரதிவாதிகள் சுவாதீனத்தில் அமர்த்தப்பட்டார்கள் என்றால் சரியல்ல. 14,15 பிரதிவாதிகள் சுவாதீனத்தை திருப்பக்கேட்டு 1 முதல் 11 பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பிய விபரம் எனக்கு தெரியாது. மேற்படி அறிவிப்பு அனுபியதன் பேரில் தான் 1 முதல் 11 பிரதிவாதிகள் தாவா சொத்தை கிரையம் செய்து கொடுத்த விபரம் எனக்கு தெரியாது. 30.09.2013 அன்று ராமசாமி, சேட்டு என்ற பழனிச்சாமி, சுப்பையா ஆகியோர்களுக்கிடையே பாகம் நடந்த பின்புதான் 1 முதல் 11 பிரதிவாதிகள் 14,15 பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் கிரைய பத்திரம் மூலம் நான் அடைந்த வகைக்கு தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்ட வகைக்கு விளம்புகை பரிகாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி அ.வ.எண்.289/2014 வழக்கு தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரிதான். 14,15 பிரதிவாதிகள் கிரையம் செய்து கொடுத்தது போக மீதமுள்ள சொத்துக்களை காட்டி தான் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 14,15 பிரதிவாதிகள் வாதிக்கு தாவா சொத்துகளை கிரையம் செய்து கொடுத்த சொத்துக்களை செல்லாது என்று விளம்புகை செய்யக் கேட்டு 1 முதல் 11 பிரதிவாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்களா என்றால் இல்லை. 1 முதல் 11 பிரதிவாதிகள் ராமசாமி, சேட்டு என்ற பழனிச்சாமி, சுப்பையா ஆகியோர்களுக்கிடையே ஏற்பட்ட பாகப்பத்திரம் மற்றும் 14,15 பிரதிவாதிகள் வாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் ஆகியவற்றை ஒப்புக்கொண்டவிட்டு தற்போது சாட்சியத்தை மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. அனுமதியின் பேரில் தாவா சொத்தில் நாங்கள் குடியிருப்பதால் முறையான கிரைய

பத்திரத்தின் மூலம் வாதி கிரையம் பெற்றிருப்பதால் தாவா சொத்துக்களை 1 முதல் 11 பிரதிவாதிகளிடமிருந்து அனுபவ மீட்பு பெற உரிமை உடையவர்கள் என்றால் சரியல்ல. அனுமதியின் பேரில் நாங்கள் தாவா சொத்தில் இருப்பதால் அனுபவ பத்தியமோ, அல்லது கிரைய பத்தியமோ வராது என்றால் சரியல்ல. இந்த வழக்கு வழக்கின் வாதி கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

**14,15 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை .**

14,15 பிரதிவாதிகள் மேற்கண்ட வாதி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்.

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

G SARAN Digitally signed by G SARAN Date: 2025.01.03 17:26:32 +0530

Additional District Judge(FAC),

Dindigul.